13th March 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such proposal.

திரு. ஜே. மாதா கவுடர் : சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கப்படும் சிமெண்ட் தொழிற்சாலை எந்த மாவட்டத்தில் துவக்கப்படும் என்பது பரிசீலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இராமநாதபுரம் மாவட்டத்திலே.

Housing Units in district centres

* 228 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the district centres in which the Madras Housing Board has opened its housing units?

THE HON. SRI R. VENKATARAMAN : Housing Units have been established at Madras, Madurai, Coimbatore and Tiruchirappalli.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸ்லம் க்ளியரன்ஸுக்காகத் தனியாக ஒரு போர்டு அமைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சும்மா போர்டு வைக்கிறதினுல் காரியம் நடக்கிறது இல்லை. தனித்தனியாக ஒரு போர்டு இருந்தால் அதிகமாக அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பெண்டிசர் ஆகிறதே தவிர வேலைகள் துரிதமாக நடப்பதில்லை. புதிதாக இதற்குத் தனியாக போர்டு அமைக்கிற உத்தேசம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படியானுல் இப்போது இருக்கிற ஹௌசிங் போர்டை எடுத்துவிட்டு, அதைத் தொழில் அமைச்சர் இலாகாவோடு சேர்த்துவிடச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபையிலே இதற்கு முன்பு நடந்த விவாதத்திலே ஹௌசிங்குக்கு என்று தனியாக ஒரு போர்டு இருந்தால் நலம், அந்த போர்டு ஆடானமஸ் ஆக இருக்க வேண்டும், சர்க்கார் ரெட் டேப் இல்லாத முறையில் நடக்க வேண்டும், அப்போதுதான் அதிகமாக, துரிதமாக வேலைகள் நடக்க முடியும் என்று பெருவாரியான அபிப்பிராயம் சொல்லப்பட்டது. அதை ஒட்டித்தான் போர்டு அமைத்தோம். இப்போது போர்டு வேண்டாம், சர்க்கார் இலாகாவோடு சேர்த்துவிடலாம் என்ருல், அதற்கு வேண்டிய ஆதரவு இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதிக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு ஒதுக்க எண்ணி இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் கணக்கு பைனலைஸ் ஆகவில்லை. ஆனபிறகு கொடுக்கலாம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இத்தகைய யூனிட் ஒன்றைச் சேலத்தில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ? இனியாவது அதை ஆரம்பிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கோயம்புத்தூரில் இருக்கிற யூனிட் சேலத்தையும் சேர்த்துத்தான் வேலை செய்யும். தனித்தனியாக ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு யூனிட் அவசியம் இல்லை. மூன்று அல்லது நாலு ஜில்லாக்களுக்கு ஒரு யூனிட் என்று வைத்து இருக்கிறோம். மதுரையில் இருக்கிற யூனிட் ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி

ஜில்லாக்களையும் கவனித்துக்கொள்ளும். இது போல கோயம்புத்தூர் யூனிட் சேலம், நீலகிரி ஜில்லாக்களில் நடக்கிற வேலைகளைச் சேர்த்துப் பார்த்துக் கொள்ளும்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த போர்டுக்கு அதிகாரப்பற்றற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிற நேரத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கெல்லாம் சட்டத்திலே ஷரத்துக்கள் இருக்கின்றன. அதைப் பொறுத்துத்தான் நாலு உத்தியோகப் பற்றற்றவர்கள் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதே மாதிரி நாலு பேர்களைப் போட்டிருக்கிறோம்.

ஆரணித் தாலுகாவில் இரண்டாவது நூற்பு ஆலை

*** 229 கேள்வி.—திரு. சி. கோதண்டராமபாகவதர் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

வடஆற்காடு ஜில்லா ஆரணித் தாலுகாவில் தனியார் துறையில் இரண்டாவது நூற்பு ஆலை ஒன்று அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. கே. பி. பழனி : மாயூரத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை எப்போது வேலை துவங்கும் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1965-ஆம் வருஷத்திற்குள்ளாக நூற்க ஆரம்பித்துவிடும்.

மாநிலத்தில் காய்கறி உற்பத்தியை அதிகரித்தல்

*** 230 கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :

(அ) காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் ஏதேனும் தமிழக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டத்தின் விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இது குறித்துச் சபை முன் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

(*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

திரு. க. ர. நல்லசிவம் : இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனை ஏகர் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்று சர்க்காருக்குத் தகவல் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Area brought under improved methods is as follows :—

1963–64—16,536 acres. 1964–65 (up to Novermber 1964)—9,567.72 acres.

New area brought under vegetables is as follows :—

1963–64—4,874 acres. 1964–65 (up to November 1964)—3,458.28 acres.

இந்தத் தகவல் மட்டும்தான் இப்போது சொல்லமுடியும்.

---

[a] 431–432-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.